[5th November 1966

கேள்வி போட விரும்பியது. கூட்டுறவு க்ரெடிட் சொசைட்டியில் எவ்வளவு பணம் மோசடி செய்யப்பட்டது? தலைவர் எங்கே இருக்கிறார் என்று கண்டுபிடிக்கப்பட்டதா? அவரிடமிருந்து பணம் வசூலிக்கப்பட்டதா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: அந்தக் கூட்டுறவு க்ரெடிட் சொசைட்டி பற்றித் தகவல் வேண்டுமானால், தனியாகக் கேள்வி போட்டால் விவரம் கொடுக்கலாம்.

* 455 கேள்வி.—**திரு. எஸ். ஜே. ராமசாமி:** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டம், அரக்கோணம் தாலுகா சிறுணமல்லி கிராமத்தில் இருக்கும் (G. 1837) பலநோக்கு நாணயச் சங்கத்தில் இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் பணம் மோசடி சம்பந்தமாக அதன் தலைவர் தலைமறைவாகி விட்டது உண்மையா?

(இ) ஆமெனில், அவர்மீது இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

(உ) மோசடி செய்யப்பட்ட ரூபாய் எவ்வளவு? எத்தனை உறுப்பினர்கள் மோசடி செய்யப்பட்டார்கள்?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) ஆம்.

(இ) இச் சங்கத்தின் தலைவர் சென்ற இடம் தெரியவில்லை. கையாடல் மேற்கொண்டு புலன் விசாரணை செய்வதற்காகவும், சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்காகவும் அவ்வழக்கு போலீசில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கையாடலில் சம்பந்தப்பட்டவர்களின் சொத்துக்களை நிபந்தனை ஜப்தி செய்வதற்கும், கையாடல் செய்த தொகையைத் திருப்பிப் பெறுவதற்காக வழக்கு (surcharge proceedings) தொடரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(உ) கையாடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 40,700 (நாற்பதாயிரத்து எழுநூறு ரூபாய் மட்டும்). இதனால் பாதிக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 55 (ஐம்பத்தைந்து).,

திரு. எஸ். ஜே. ராமசாமி: இச் சங்கத்தில் சம்பந்தப்பட்ட ஒரு நபர் அகப்படவில்லை என்று சொன்னார்கள். இப்பொழுது அவர் வந்துவிட்டிருக்கிறார். அவரிடமிருந்து பணம் வசூல் செய்யப்பட்டதா? இந்தக் கேள்விக்குப் பதில் தயாரிக்கப்பட்டதற்குப் பிறகு மேற்கொண்டு தகவல் வந்திருந்தால், அதை அமைச்சர் அவர்கள் சொல்ல முற்படுவாரா?

கனம் சபாநாயகர்: 'லேடஸ்ட் இன்ஃபர்மேஷன்' கனம் அங்கத்தினருக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது. குறிப்பிட்ட நபர் ஊரில் இருப்பதாகக் கனம் அங்கத்தினர் சொல்லுகிறார். அதைப் பற்றி கனம் அமைச்சர் ஏதாவது சொல்லவேண்டுமானால், சொல்லலாம்.

5th November 1966]

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: அந்த நபர் ஊரிலேயே இருப்பாரானால், போலீசார் பிடித்திருப்பார்கள்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: இந்த நாற்பதாயிரத்து எழுநூறு ரூபாயை எடுத்துக்கொண்டு அதன் தலைவர் ஓடிவிட்டார் என்பதாக கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தத் தொகையை அவர் ஒரே தேதியில் எடுத்துக்கொண்டு ஓடினாரா? பல மாதங்களில், பல தேதிகளில் இந்தக் கையாடல் நடந்திருக்கிறதா? கனம் அங்கத்தினர் இராமசாமி குறிப்பிட்டதுபோல அவர் இப்போது ஊரில் இருந்தும் அதிகாரிகள் அவர் மீது நடவடிக்கை எடுக்காது இருப்பதற்குக் காரணம் அதிகாரிகளும் இந்தக் கையாடலுக்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்பது உண்மையா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: எந்த எந்தத் தேதிகளில் கையாடல் நடந்திருக்கிறது என்கிற விவரத்தைக் கொடுக்கிறேன். 7—1—1965 இல் ரூ. 3,200; 10—2—1965 இல் ரூ. 6,400; 17—2—1965 இல் ரூ. 4,000; 23—2—1965 இல் ரூ. 2,600; 14—3—1965 இல் ரூ. 12,000; 28—3—1965 இல் ரூ. 8,500; 9—4—1965 இல் ரூ. 4,000. ஆக மொத்தம் ரூ. 40,700.

திரு. ப. உ. சண்முகம்: சட்டமன்றத் தலைவர் அவர்களே, இத்தனை மாதங்கள் வரையில் கூட்டுறவு சூப்ரவைசர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? அவ்வப்போது பரிசிலனை செய்ய வேண்டிய அவர்களும் கூட இதைக் கண்டு பிடிக்காமல் விட்டு வைத்ததில் இருந்து ஒருவேளை அவர்களும் இந்த மோசடிக்கு உடந்தையாக இருந்தார்களா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: அந்த பாங்கு சூப்ரவைசர்களும் பரிசிலனை செய்தார்கள். அவர்களுக்கு மேலே கூட்டுறவு ஜாயின்ட் ரிஜிஸ்திரார், ரிஜிஸ்திரார் ஆகியவர்கள் கண்காணிப்புச் செய்கிறார்கள்.

கனம் சபாநாயகர்: இப்போது இன்வெஸ்டிகேஷன் நடந்து கொண்டிருக்கிறதா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: இப்போது இன்வெஸ்டிகேஷன் நடந்துகொண்டிருக்கிறது.

*** 456 கேள்வி—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம், பெரும்பாக்கம் கிராமத்திலுள்ள பல நோக்கு கூட்டுறவு சங்கம் சுமார் இரண்டு ஆண்டுகளாக இயங்காமலிருப்பதற்கு காரணம் என்ன?

(இ) மேற்படி சங்கம் மீண்டும் இயங்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார் : (அ) பெரும்பாக்கம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ஐந்து நெறியாளர்களில் மூவர் 23—12—1964 அன்று ஒரே சமயத்தில் பதவி விலகல் கடிதம் கொடுத்தனர். அதன்பின் அவர்கள் எந்தக் கூட்டத்திற்கும் வரவில்லை. கூட்டம் நடத்தப்படுவதற்கு எஞ்சிய இரண்டு நெறியாளர்கள் நிர்வாகச் சிற்றெண் (Quorum) தேவையைப் பூர்த்தி செய்யாத காரணத்தால் மூன்று நெறியாளர்களின் பதவி விலகலை ஏற்கவும் முடியவில்லை. இடைக்கால காலியிடங்களை நிரப்பவும் முடியவில்லை. இவ்வாறு சங்கத்தின் குழு செயலற்றுப்போய் சங்கம் இயங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

(இ) சங்கத்தின் குழு கலைக்கப்பட்டு, கூட்டுறவுச் சங்க முது நிலை ஆய்வாளர் ஒருவர் இச்சங்கத்தின் அலுவல்களைச் சீர்ப்படுத்துவதற்கென தனி அதிகாரியாக நியமிக்கப்பட்டார். கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அச்சங்கத்தைக் கலைப்பதற்குப் பிறப்பித்த ஆணைகளுக்கெதிராக சங்கத்தின் முன்னாள் தலைவர் ரிட் மனு ஒன்றை சென்னை உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். சங்கத்தைக் கலைப்பதற்குப் பிறப்பிக்கப்பட்ட ஆணை செயல் படுத்தப்படுவதை உயர் நீதி மன்றம் நிறுத்திவைத்துள்ளது. இந்த விஷயம் இப்போது நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : முறைப்படி 1964-ல் தேர்தல் நடந்தது. தேர்தல் செல்லாது என்று வழக்குப் போட்டார்கள். தேர்தல் அதிகாரி மறு தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்று உத்தரவு போட்டார்கள். இப்படி 1964-ல் உத்தரவு போடப்பட்டு இருந்தும், 1966 வரைக்கும் தேர்தல் நடக்காததற்குக் காரணம் என்ன ?

கனம் சபாநாயகர் : அது தான் 'கோரம்' இல்லை என்று சொன்னர்களே.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார் : அந்தச் சங்கத்தின் ஐந்து நெறியாளர்களில் 3 பேர்கள் பதவி விலகல் கடிதம் கொடுத்துவிட்ட காரணத்தினல் தேர்தலை நடத்த கோரம் இல்லாது போய் இருக்கிறது. ஹைக்கோர்ட்டிலும் ரிட் மனு இருக்கிறது. ரிட் மனு தள்ளுபடி ஆகவில்லை.

* 457 **கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், அரக்கோணம் தாலுகாவில் உள்ள தாலுகா கூட்டுறவு சொசைட்டியின் 1963-64, 1964-65-ம் வருடங்களுக்கான கணக்குகளைத் தணிக்கை செய்த ஆடிட்டர் அவர்களிடமிருந்து ஸ்பெஷல் ரிப்போர்ட்டு ஏதேனும் பெறப்பட்டதா ?